REGD. No. M 4642

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 3—2—52 | இதழ் 31

# "அகிம்சா விலாசம்" திறக்கப்படட்டும்!

அடுக்குப்பானைகள் உருட்டப்படுகின்றன — வீட்டு வாசல் இடிக்கப்படுகிறது—கொல்லைக் கதவு அகற்றப்படுகிறது—பொருள்கள் யாவும் பறிமுதல் என்று கூறப்படுகிறது. வீட்டுப் பெரியவர் துடிக்கிறார்—'ஏனையா—இதெல்லாம்' என்று, அவரையுமறியாது, ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கிக் கேட்கிறார்.

"எங்கே, உன் மகன்? எங்கே மறைத்திருக்கிறீர்கள் — சொல்லு! சொல்லு!!" என்று, ஆர்ப்பரிக்கின்றனர். பெரியவர், அழுகிறார்! குழந்தைகள், தாயின் கண்ணீரையும் தாத்தாவின் அழுகையையும் பார்த்து, 'ஓ'வென்று அலறுகின்றன!!

* * *

இதுபோன்ற நிகழ்ச்சிகள், கம்யூனிஸ்டுத் தலைவர்களின் இல்லங்களிலே, ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன. தலைமறைவாய் இருப்போர், தங்களை வசம் அகப்படவில்லையென்ற ஆத்திரத்தால்—காங்கிரஸ் ஆட்சியின் 'அம்புகள்' செய்த ஆர்ப்பாட்டங்கள் குறித்து, தஞ்சை மாவட்டத்திலே கேட்டால் விதவிதமான வேதனைப் பட்டியல்கள் நமக்குக் கிடைக்கும். வீதிகளிலே முழங்கிய துப்பாக்கிகள்—வீட்டுத் திண்ணையிலே படுத்துத் தூங்கியவன் குண்டடிபட்ட சம்பவம்—ஓடித்தூரத்தி சுட்டு வீழ்த்திய காட்சி—ஆதித் திராவிட மகளிர்பட்ட அவதி — அங்கெல்லாம் நடத்தப்பட்ட 'அகிம்சை' வேடிக்கை—இந்த காங்கிரஸ்காரர்கள், தேடிக்கொண்ட அழியாத அவமானச் சின்னங்களாக, மறையாத வடுக்களாக, மக்கள் மன்றத்தின் கவனத்திலே பதியப்பட்டுக் கிடக்கின்றன.

வயல்களிலே புயல், ஏற்படுத்தப்பட்டது, கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர்களால். அதன் காரணமாக, தூங்கிக் கிடந்த புலிகள் முழக்கேற்றப்பட்டதுபோல, ஆதித்திராவிட விவசாயப் பெருங்குடி மக்கள் துள்ளி எழும்பினர்—அந்த ஆவேசத்தால் பல வீடுகள் இடிக்கப்பட்டன, கேடுகள் விளைந்தன, அடாத நிகழ்ச்சிகள் பலவற்றை, ஆங்காங்குள்ளோர் அனுபவிக்கநேரிட்டது.

விவசாய மக்கள் விழிகொண்டெழுந்ததால், பண்ணை முதலாளி மட்டுமல்ல, அவனது எடுபிடிகளாக உலவும் 'குட்டி' மிராசுதாரர்கள், கொஞ்சம் நிலம் வைத்திருப்போரும் மிக மிக வாதைப்பட்டனர்.

இந்த வேதனை, இலட்சிய சாதனையைத் தராது—என்று, நாம் கருதினோம்—கொள்கைமாற்றம் வேண்டும் நடைமுறைப் போக்கில் என்று கூறினோம்.

ஆனால், அதே நேரத்தில், வீறுகொண்ட புலிகளென எழும்பிய விவசாயிகள்மாட்டு சினம் கொண்ட சிம்மம் போல, துப்பாக்கியையும் தூர்ச்செயல்களையும் பரவவிட்ட, காங்கிரஸ் ஆட்சியின் 'வெறி' கண்டு — கலங்கினோம், கண்டித்தோம் — கண்டனக் குரல்களை எழுப்பினோம்.

"கம்யூனிஸ்டுகள் தொல்லை சகிக்க முடியவில்லை!"

"ஆகவே, பாதுகாப்பு சட்டம் செய்கிறோம்."

"தலைமறைவாயிருப்போருக்கு சாப்பாடுபோட்டு, தங்க இடம் கொடுத்தால், அவருக்கும் சிறை வாசம் உண்டு."

"கேள்விமுறையில்லாது சிறையில் போடுவோம்!"

திமிர்பிடித்தோர் போல, இத்தகைய சட்டங்களை, காங்கிரஸ் சர்க்கார், நிறைவேற்றியபோது, நாம் கண்டிக்காத நாள் கிடையாது—'கூடாது! கூடாது!!' என்றுபேசாத கூட்டங்கள் இல்லை.

"அடக்குமுறைப் பாதையில் செல்லாதீர்—அடாது, செய்யாதீர்! அழிந்துபட நேரும்" என, எச்சரித்தோம். எச்சரித்த நம்மீது எரிந்து விழுந்தனர்—'ஏடா, உனக்கென்ன!' என்று நமக்கும் துப்பாக்கியையும், தடியடிகளையும், பரிசாகத் தந்தனர். பேசினால் மிரட்டினர்; கூடினால் விரட்டினர். எழுதினால் சிறைக்கம்பிகளைக் காட்டினர்—மீறினால் சுட்டனர்! பொசுக்கினர்!!

"இந்த தர்பார்—நீங்கள் வெட்டிக் கொள்ளும் படுகுழி. ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிக்கிறீர்கள்—பாசிசத்தை வளர்க்கிறீர்கள். பலனை அனுபவிப்பீர்கள்"—என்று, மக்கள் மன்றம், காங்கிரஸ் ஆட்சியைப் பார்த்து, காறியுமிழ்ந்தது.

பலன்; இன்று எங்கு பார்த்தாலும் தோல்வி — முக்யஸ்தர்களெல்லாம் மூக்கறுக்கப்பட்டனர்—காங்கிரஸ் மந்திரிசபை அமையுமோ! மீண்டும், ஆட்சியை நிர்வகிப்போமோ!' என்கிற சஞ்சலநாதம், காங்கிரஸ் தலைவர்கள் மத்தியில்.

வேதனைபட்ட மக்கள், மஞ்சள் பெட்டியை மனதார நம்பிய மக்கள்—மஞ்சள் பெட்டி தாலியறுத்தது! தாறுமாறாக ஆட்சி நடத்திற்று; வதைத்தது! சட்டத்தை மதிக்கவில்லை! சிறைகளை நிரப்பிற்று! சீறிற்று! சித்ரவதை செய்தது! — என்று உணர்ந்த காரணத்தால், காங்கிரஸ் அபேட்சகர்களை விரட்டிவிட்டு, காங்கிரசுக்கெதிராக நின்றோரைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டோரில், ஒருவர்தான் மணலி கந்தசாமியும் அவர் காங்கிரஸ் சர்க்காரின் அடக்குமுறையால் சோதிக்கப்பட்டவர் — அவரது இல்லம் இன்றும் கதவில்லாமல் கிடக்கிறது — அவரது தந்தை படுக்கையில்கிடக்கிறார்—ஆனால் அவரோ, எங்கிருக்கிறார்?' என்றே தெரியவில்லை — அவர்மீதுள்ள 'வாரண்ட்' இன்னும் சர்க்காரால் ரத்து. செய்யப்படவில்லை!

* * *

மணலியார்மட்டுமல்ல, இன்னும் ஏராளமானோர் அரசியல் காரணங்களால், சிறைக்குள்ளே பூட்டப்பட்டும், 'காவற் கைதிகள், என்றபெயர் சூட்டப்பட்டும், 'கைது செய்யப்படவேண்டும்' என்ற உத்திரவுகளுக்கு ஆட்பட்டும், கிடக்கின்றனர். ஆட்சிபீடத்திலிருந்து விரட்டப்படும் நிலையுள்ள 'அகிம்சாவிலாசம்' இன்னும், அவர்கள்பற்றி தனது அடக்குமுறை தர்பாரை தளர்த்தவில்லை—வாரண்டுகளை ரத்து செய்யவில்லை — சிறையில் வாடுவோரை விடுதலை செய்யவில்லை—'காவற்கைதிகள்' என்ற முத்திரையை மாற்றவில்லை.

இந்தக் 'கைதி'களிலே சிலர், இப்போது சட்டசபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்—காங்கிரஸ் ஆட்சியின் கேவலத்துக்கு இரையான மக்களால்.

ஆனால். 'அகிம்சா விலாசமோ' அது பற்றி, நினைத்ததாகத் தெரியவில்லை.

பல 'பரோலில்' உலவுகிறார்கள்—பலர் சிறையிலே—பலர் தலைமறைவாக—பலர் குற்றவாளிக் கூண்டிலே!

"இந்தக் கொடுமை — இனியும் நீடிக்க வேண்டுமா?"—முற்போக்கு முன்னணிகள், ஒரே குரலில், கேட்கின்றன, இக் கேள்வியை. ஆனால், மூக்கறுபட்டவரோ, இன்னும்தமது முறைப்பையும் விறைப்பையும் தளர்த்தவில்லை!

அணையும் ஜோதி, சுடர் விட்டு எரியுமே. அதுபோல தமது கடைசி நேரம் வரையிலும், தர்பாரை நடத்தப் பிரியப்படுகின்றனர் போலும். காந்திய சீடர்கள்.

இந்தப்போக்கு—இன்னும் இவர்களைக் கேவலமாக்கும். மக்கள் மன்றம், அழியாத இகழ்ச்சி மாலையைச் சூட்ட வழி வகுக்கும். காலம் மாறுகிறது — கருத்துக்களும் மாறிவிட்டன—ஆனால் 'அகிம்சா விலாசம்' மட்டும் அப்படியே இருக்கலாமென நினைக்கிறது!

கடந்த வாரம் திருவாங்கூர் கொச்சி சர்க்கார், தாம் இது வரை நடவடிக்கை மேற்கொண்டிருந்த எல்லா காவல் கைதிகளையும் விடுவிப்பதென முடிவு செய்திருக்கின்றனர்—அவர்களில் பதின்மர், சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோர்.

அந்த வழியை, விரைவில் 'அகிம்சா விலாசம்' கடைப்பிடிக்க வேண்டும். அரசியல் கைதிகள் அனைவரையும், விடுவிக்கவேண்டும் — வழக்குகளை வாபஸ் பெற்று, புதுக் கொள்கையும் புதுப்பொலிவும் பெற்றுலவ விரும்பும் பொது வுடைமைத் தோழர்களை சுதந்திரமாக உலவச்செய்ய வேண்டும்.

வளர்ந்து வரும் புதுமைக் குரலின் சார்பில்— கடைசி நேர எச்சரிக்கையாக, காங்கிரசாட்சிக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். 'அகிம்சாவிலாசம்' திறக்கப் படட்டும்! அடக்கு முறைவாயில் மூடப்படட்டும்!!

## "ரஷ்ய இலக்கியம்"

ஏழைகளின் வியர்வைத் துளிகளைக் கதையாக்கி, மக்களின் இதயங்களிலே புரட்சிக்கனலைத் தூண்டிவிட்ட பெருமை, ரஷ்ய எழுத்தாளர்களுக்குண்டு. உலக இலக்கியங்களிலே, சிறந்ததெனப் போற்றப்படுவது, ரஷ்ய இலக்கியமாகும். புஷ்கின் வீசிய வார்த்தைகள், துர்கனிவ் தந்த கருத்துச் சிற்பங்கள், கோகேல் காட்டிய விடுதலைப்பாதை, லெர்மாண்டோவ் சித்தரித்த பழைமை எண்ணங்களின் கேடுகள், கார்க்கியின் கனல் தெறிக்கும் நடை—ரஷ்ய சமுதாயத்தை பசுஞ்சோலையாக்க மிக மிகப் பயன்பட்டிருக்கின்றன.

ரஷ்யக் கதைகளிலே காதலைக் காணலாம்—ஆனால் வெறும் இதய அலைகளை மட்டும சொல்லி விடும் எழுத்துக்கூடாக இருக்காது—எண்ணங்களைக்கிளறி 'இதுதான்உலகம்' என்று விளக்கும் எழுச்சிக்குரல்கள் தொனிக்கும்.

இத்தகைய சிறப்புகள் மின்னும் ரஷ்ய இலக்கியத்தைப் பற்றி நண்பர் ப. வாணன் அவர்கள், தமிழுலகுக்குத் தந்திருக்கிறார்.

"ரஷ்ய இலக்கியம்"—என்ற பெயரைக் கண்டதும், ரஷ்ய நூல்களின் அழகு, சிறப்பு பற்றிய விமர்சனங்களிருக்கும் என்று எண்ணி விடாதீர்கள்! ரஷ்யச் சிறுகதைகள், இதயத்தை அள்ளும் சிறு நாவல்கள் எல்லாம், நண்பர் வாணனால், திறம்பட தரப்பட்டிருக்கின்றன — அழகான தமிழில். தமிழுலகுக்கு இது போன்ற முயற்சிகள், அதிகம் கிடைக்க வேண்டும்—அவர் மூலம்.

பெரியதொரு காரியம் — அதை பெருமையுடன் செய்திருக்கிறார், வாணன். தமிழ் மாதாவின் மணிமுடியில் சிறந்ததொரு மாணிக்கம் 'ரஷ்ய இலக்கியம்'. அழகான முறையில், திருச்சி, திராவிடப் பண்ணையார், வெளியிட்டிருக்கிறார்கள் — விலை ரூ. 1—8—0 தான்!

ரஷ்ய உலகு பற்றி அறிய விரும்பும் அனைவரும், பெருமையுடன் ஏந்த வேண்டிய அருமையான, களஞ்சியம், இந் நூல். புது உலகம் காணவிரும்பும், எல்லோருக்கும் 'ரஷ்ய இலக்கியம்'—ஒரு கலங்கரை விளக்கம்!

# நமது அன்பு வாழ்த்துக்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவோடு, த் தேர்தலில், காங்கிரஸ் ஆதிக்க வெறிக்கு மணியடித்து, வெற்றி பெற்றோரின் பட்டியலைக் 1—52 வரை) கீழே தந்துள்ளோம் — உளப் போடு. நமது மதுரைத் தீர்மானப்படி—ஒப்பந் த்திரத்தில் கையெழுத்திட்டு,

திராவிட நாடு தனியரசுக் கோரிக்கையை ஆதரிக்கிறேன்,

அதற்காக சட்டசபையிலும் பார்லிமெண்டிலும் போராடுவேன்,

உறுதிமொழியோடு, உதயசூரியன்போல, காங் இருளைக் கிழித்து, வெற்றிமாலை சூடிய இவர் ன் பவனியைப்பற்றி நினைக்கும்போது, பூரிப்புக் ள்கிறோம்.

இருள் நீங்கி, புதுவாழ்வு மலர, வெற்றிபெற்று கும் தமிழகத் திருவிளக்குகளுக்கு நமது அன்பு ழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்தம், ற்றி கண்டு களிநடம் புரிந்து மாலைகள் சூட்டி, மன ல்லாம் இன்பமழை பெய்ததுபோல, ஏறுநடை டும் பொதுமக்களுக்குரியோராக நடக்கவேண்டும், வாழ்வு மிளிர அவர்தம் பணி வளரவேண்டும் எனத் ரிவித்துக் கொள்கிறோம்—வாழ்க வெற்றி விளக்கு வளர்க உரிமைக் கோரிக்கை!!

## பார்லிமெண்டு

ச்சி … டாக்டர் மதுரம்
ச்செங்கோடு … எஸ். கே. பேபி (கந்தசாமி)
ண்டிவனம் … திருக்குறள் முனுசாமி -பி. ஏ., பி. எல்.
, (ரிசர்வ்டு) … ஏ. ஜயராம்
ஞ்சிபுரம் … டாக்டர் கிருஷ்ணசாமி
ந்தவாசி … என். ஆர். முனுசாமி
மபுரி … என். சத்யநாதன்

## சட்டசபை

டலூர் … எஸ். எஸ். ராமசாமி
, (ரிசர்வ்டு) … எ. ரத்தினம்
ல்குடி … ராஜா சிதம்பரம்
றையூர் … பி. ரங்கசாமி பி. ஏ. பி. எல்.
அரவக்குறிச்சி … கே. என். ரத்தினம்
செங்கற்பட்டு … கே. விநாயகம் பி. ஏ.
காஞ்சிபுரம் … எஸ். தெய்வசிகாமணி -பி. ஏ. பி. எல்.
ஸ்ரீரங்கம் … டாக்டர் சிற்றம்பலம்
வாழப்பாடி … எம். பி. கந்தசாமி
பெரம்பலூர் … பரமசிவம்
தாராபுரம் … சேனாபதி
பண்ருட்டி … எஸ். ராதாகிருஷ்ணன் பி. ஏ.
விருத்தாச்சலம் … என். பரமசிவம் பி. ஏ.
,, (ரிசர்வ்டு) … கட்டிமுத்து
திருக்கோயிலூர் … டி. டி. முத்துகுமாரசாமி
,, (ரிசர்வ்டு) … எ. முத்துசாமி
விழுப்புரம் … நாகராஜன்
விக்கிரவாண்டி … எ. கோவிந்தசாமி
திண்டிவனம் … வேணுகோபால்
,, (ரிசர்வ்டு) … ஜகன்னாதன்
செஞ்சி … கே. அரங்கநாதன்
மேல்மலையனூர் … கோபாலர் பி. ஏ. பி. எல்.
பழனி … எம். பி. மங்களக்கவுண்டர்
ஒட்டன்சத்திரம் … எஸ். இலட்சுமிபதி
அரூர் … எ. துரைசாமி
ஓமலூர் … பி. ரத்தினசாமி
ஆத்தூர் (ரிசர்வ்டு) … எம். பி. சுப்பிரமணியம்
கிருஷ்ணகிரி … டி. கிருஷ்ணமூர்த்தி
மாயவரம் … கே. ஆர். சம்பந்தம் பி. ஏ.
,, (ரிசர்வ்டு) … ஏ. வேலு
அரக்கோணம் … பி. பக்தவச்சலம்
திருப்பத்தூர் … இ. எல். ராகவன் பி. ஏ., பி.எல்.
ஆரணி … வி. கே. கண்ணன்
வந்தவாசி … எஸ். சோமசுந்தரம்
,, (ரிசர்வ்டு) … தசரதன்
வாணியம்பாடி … எ. கே. அனுமந்தராயர்
செய்யாறு … தருமலிங்கம்
போளூர் … எம். எ. மாணிக்கவேல்
ஸ்ரீபெரும்புதூர் … டி. சண்முகம்
முசிறி … தங்கவேலு பி. ஏ. பி. எல்.

★

# துயரமுகத்தோரே! துயரமுகத்தோரே!!

தோல்விகளைக் கண்டதால், துயர துந்துபி முழக்கத் தொடங்கியிருக்கும், 'தினசரி' இதழ்களும், தினசரி காங்கிரஸ்காரர்கள், வெற்றி பெறாமற் போனதற்கான விளக்கங்கள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. அந்தக் காரணங்களில், முக்கியமானதெனத் தோற்றோர் குறிப்பிடுவதெல்லாம் "பிரச்சாரம் இல்லை"! என்பதுதான். பிரசசாரம் போதிய அளவு, காங்கிரஸ் சார்பில் நடைபெறாமற் போனதன் காரணமாகவே தாங்கள் தோல்வியுற்றோம் என்று, துயர முகத்தோர், குறிப்பிடுகிறார்கள். இந்தப் 'பல்லவி'க்கு சரணம் பாடுவது போல், கடந்தவார 'கல்கி' இதழும் தன்து, தலையங்கத்திலே குறிப்பிட்டிருக்கிறது—"காங்கிரஸ் சார்பில் போதிய பிரச்சாரம் நடக்கவில்லை!" என்று. அதோடு, கடந்த ஐந்தாண்டுகளில், திராவிட இயக்கத்தார் கடும் புயலென காங்கிரசாட்சியை எதிர்த்து, நாடகம்—சினிமா—எழுத்து—பேச்சு—ஆகிய எல்லா வழிகளிலும் பிரச்சாரம் செய்து வந்தார்களெனவும், அது இத் தேர்தலில் மிக்க பலனைத் தந்திருப்பதாகவும், கல்கி, கதறியிருக்கிறது.

பிரச்சாரம் இல்லை!

எதிர்பிரச்சாரம் அதிகம்!!

துயரமுகத்தோர், தோல்விக்குப் பிறகு, இவ்விரு காரணங்களையும் வெளியிடுகிறார்கள். அதிலும், 'சந்துமுனைசிந்து'க் கும்பல்கள் குரலெடுத்துக் கதற, தங்கள் மகாத்மியங்கள் பற்றி விமர்சனம் செய்ய 'வானொலி'யிருந்திருக்க, வகைக்கொரு விதம் படங்கள் போட்டு செய்திகள் பிரசுரிக்கும் பத்திரிகைக் கூட்டம் பராக்குக்கூற, "இதோ பாரீர்! அணைக்கட்டு! அதோபாரீர் அதற்கு நேருஜி கல் நடுவதை!!" என்று காட்ட செய்தி இலாகா திரைப்படப் பிரிவு இருக்க, இத்துணை மூலமும் தங்களது திருச்சேவைகளைத் தினசரி பரப்பிய 'தேஜோன்மயானந்தர்கள்' செப்புகிறார்கள், போதிய பிரச்சாரம் இல்லை, என்பதாக.

தேசிய ஏடுகள், கூறும் காரணமான, 'பிரச்சாரம் இல்லை' என்பது பற்றி, சிந்தித்துப்பார்த்தால், ஊமையும் நகைப்பான் — தாங்கள் செய்யும் காரியங்கள் குறித்து, வெளி உலகுக்கு விளம்பரம் செய்ய, காங்கிரஸ் கட்சிக்கு இருக்குமளவு, வேறெந்தக் கட்சிக்கும் வசதிகிடையாது.

பெரிய பெரிய பத்திரிகைகள் ஒன்று, இரண்டா— எத்தனையெத்தனை! ஆங்கிலம்—தமிழ்—அத்தனை ஏடுகள், காங்கிரஸ் பற்றி எழுதாத நாளில்லை—பரவச அந்தாதிபாடாத கிழமையில்லை — விசேஷ மலர்கள் வெளியிடாத 'ஜயந்திகள்' கொஞ்சமா! அவ்வளவு பத்திரிகைபலம், — அதற்கு மேலாக காலைமாலை இரவு, எந்நேரமும் அலறும் அனைத்திந்திய வானொலி நிலையம் — எல்லாம் 'பிரச்சாரம்' செய்யாமலா இருந்தன, இருக்கின்றன! செய்தி இலாகா என்ற பெயருடன் டில்லி சர்க்கார் மட்டுமல்ல, சென்னை சர்க்காரும், தனி இலாகாக்கள் அமைத்துக்கொண்டு, ஏராளமான பணச் செலவில், தனிப் பத்திரிகையும் சினிமாச் செய்திக் கதிர்களும்— நடத்தாமலில்லை! இருந்தும், கூறுகிறார்கள், 'பிரச்சாரம் நடைபெறவில்லை!' என்பதாக.

* * *

துயரமுகத்தோர், கூறுவது போல, பிரச்சாரம் நடைபெறாமலிருக்கவில்லை — நடைபெற்றது எல்லாவழிகளிலும். ஆனால் அவைகள், மக்கள் மனதைக் கவரவில்லை—கவருமளவுக்கு எதுவும் இல்லை — கவரும்படிக்கூற ஏதும் செய்யவில்லை.

இந்த உண்மையை உரைக்கமுடியாத, தேசிய ஏடுகள், 'பிரச்சாரம் இல்லாத காரணத்தால்தான் காங்கிரஸ் தோற்றது — இல்லாவிடில் ஜயக்கொடி நாட்டியிருக்கலாமென, வீண்வாதம் கிளப்புகின்றன.

மக்கள் கவனத்தைவிட்டு தங்கள் கட்சி, மறையமுடியாதபடி தினசரி எழுதியவண்ணம்தான் இருந்தனர் —பெரிய அளவில் தலைவர்கள்படங்களை வெளியிடவும் தவறியதில்லை— அவர்கள் புகழ்பற்றி அகவலும் அந்தாதியும் பரப்பாமலுமில்லை— பொதுமேடைபோட்டு பேசாமலுமில்லை.

காங்கிரஸ் கூட்டங்களிலே நடைபெற்ற சொற்பொழிவுகள் — இன்னும் நம் சிந்தையைவிட்டு மறையவில்லை. பயில்வானும், விபூதியும், காமராசரும், சுப்பையாவும், சந்துமுனையரும், சிந்துக்கவிகளும், புறப்பட்டனர் — பிரச்சாரத்துக்கு. 'ரகமும்' 'தரமும்' குறைந்தது அல்ல நாம் குறிப்பிட விருப்புவது—அவர்கள் காட்டிய, கவனமெல்லாம், நம் மீதுதானே ஒழிய; காங்கிரசார் என்ன செய்திருக்கிறார்கள், செய்யப்போகிறார்கள் என்பது பற்றி, சிறுவாசகம்கூட செப்பவில்லை.

முன்பெல்லாம், காங்கிரஸ் கூட்டங்களென்றால், காந்தியாரின் நிர்மாணத்திட்டம், சுயராஜ்யப்போராட்டத்தால் விளையும்பயன், 'அன்னையின் காலில் விலங்குகளோ?' என்ற கேள்விக்கீதம் — இப்படியிருக்கும் ஆனால் இப்போது அவைகள் இல்லாதுமட்டுமல்ல, அவைகள்பற்றிய சிந்தனையே மங்கிவிட்டது, காங்கிரசாருக்கு. நாம் தான் கவனத்தில் நின்றோம்—சுதந்திரதினவிழாவானாலும், காந்திஜயந்தியானாலும், கஸ்தூரிபாய் தினமானாலும், நம்மைப்பற்றித்தான்—ஏசினர். இதுவே, இப்போதைய தேசியப் பிரச்சாரம் என்று கருதினர்.

## நன்றியுரை

திருச்சிராப்பள்ளி தொகுதி இந்திய பார்லிமெண்டு ஸ்தானத்திற்கு சுயேச்சை அபேட்சகனாக காங்கிரசை எதிர்த்து போட்டியிட்டதில், எனக்கு பேராதரவு தந்து, பெரும்பான்மை வாக்குகளில், வெற்றி பெறக் காரணமாயிருந்த வாக்காளர்கள், நண்பர்கள், ஊழியர்கள், ஸ்தாபனங்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன், வணக்கம்.

டாக்டர் இ. மதுரம்

முனிசிபல் சேர்மேன்

திருச்சி

'திராவிட முன்னேற்றக் கழகத்தார் கூட்டம் நடத்தினர்' — என்றொரு தாக்கல் போதும், 'சர்க்காரைக்கண்டித்துப் பேசினர்—ஆவேசமாக இருந்தது — ஆகவே, நீங்கள் வரவேண்டும்' என்று அந்த ஊர், காங்கிரஸ் பிரமுகர் தந்தியோ, தபாலோ விடுப்பார் — தேசியப் பிரங்கிகள், வருவர். என்னென்ன பேசினார்கள் தி. மு. க. வினர் என்று கேட்டு, அவைகளை மறுத்தோ, அல்லது அவர்கள் கூறுவது பொய் என்று காரணங் காட்டியோ, பேசுவதற்குப் பதில், தி. மு. க. வினரின் அங்க அமைப்பு, 'யார் தெரியுமோ?' என்ற சந்துச் சிந்து ஆகியவைகள் பாடப்படும்.

நாம், இந்தச் சர்க்காரால் நாட்டுக்கு விளைந்த அனர்த்தங்களை எடுத்துக் காட்டியபோது, அவைகளை மறுக்கவோ, 'இல்லையென்று கூறவோ,' இயலவில்லை — காங்கிரசாரால். காரணம், நாம் கூறியவை அத்தனையும் நாட்டின் கண்முன்னே நடப்பவை! நன்றாடம் நிகழ்பவை! ஆகவே, மறுக்கமுடியாத நிலையில், மதம்பிடித்த யானைகள் போல, கர்ஜிக்க துவங்கினர்.

"இன்னின்ன நன்மைகளை எங்களாட்சி, செய்து தந்திருக்கிறது"— என்று கூற, ஒரு சிறு எடுத்துக் காட்டு கூட, இல்லை, காங்கிரசாருக்கு.

அவ்வளவு கேவலம்—வளர்ந்தது. அதனால், பேச, பொருள் இல்லாததால், நம்மை நோக்கி அல்ப வார்த்தைகளை ஈட்டிகளாக்கிப்பாய்ந்தனர்- புதுப் புது பிரசங்க பூஷணங்கள் கிளம்பின. பழைய காங்கிரஸ் பிரமுகர்கள், இருந்தவிடம் தெரியவில்லை—அவர்களையெல்லாம், பெர்மிட் வேட்டையும், வியாபார மூட்டையும், பணக்காடும், மூடிவிட்டன. கேவலம், வளர்ந்தது காங்கிரஸ் மேடைகளில்—பணம் கொந்தளிக்க மக்கள் 'தூ! தூ!!' என்று, ஏளனம் செய்து, எட்டிப்பாராத நிலை வளர்ந்தது—காங்கிரஸ் கூட்டமென்றால், கவலைப் படவில்லை — சிரத்தை காட்ட வில்லை, எவரும்.

காங்கிரஸ் பொது மேடைகளின் கதி, இப்படியாயிற்று — பிரச்சாரம், படுகுழிக்கு பாதையமைத்தது. பத்திரிகைகளோ வழக்கம்போல, எப்போதும், சர்க்காரைப் பாராட்டி, எழுதத் தவறவில்லை—மதுவிலக்கு வந்தாலும், 'அரிசி இல்லை—ஆறவுன்சுதான்' என்று மந்திரிமார்கள் உத்திரவிட்டாலும் தடியடிகளை வீசினாலும், தாறுமாருக தறுதலை ஆட்டம் போட்டாலும்-தேசியத் திருவாளர்களின் பேரும், திருவந்தாதிபாடிற்றே தவிர, உண்மைகளை உரைக்க உரம் பெறவுமில்லை—முயலவுமில்லை. இதனால், பத்திரிகைகள், எவ்வளவு பெரிதாக, காங்கிரஸ் தலைவர்களுடைய படங்களைப் போட்டு பிரசங்கங்களை வெளியிட்டு, விளம்பரப் படுத்தினாலும்—வெறுத்துப் பேசுவது விரிவாயிற்றே தவிர, மக்கள் மன்றம் நம்பவில்லை. 'எல்லாம் பித்தலாட்டம்—பொய்யை மெய்யாக்கும் புரட்டர்கள்' என்கிற, பட்டங்களைச் சூடிக்கொண்டனர். மக்கள் வேதனையை சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய ஏடுகள், எப்போதும் போல, ஜனகணமன—அதிநாயகஜயஹே!' என்ற கூச்சலுக்கு, ஆலவட்டம் சுற்றி, ஆட்சியாளர் தாளடி பணிந்ததால், அவர் தம் பிரச்சாரமும்—நம்பிக்கை இழந்து போயிற்று.

இதே கதிதான் — வானொலியில் பிரதமர் பேசினாலும், வெளிநாடுகளில் நேரு உலவுவதைத் திரைப் படத்தில் காட்டினாலும் ஏற்பட்டது. இந்தப்பிரச்சாரங்கள்—வதைக்கப்பட்ட மக்கள் மனதில் அனலையும் புனலையும் எழுப்பிற்றே தவிர, "அவர் பெருமையைப் பாரீர்! இவருக்கு இங்கெல்லாம் பெருமை!!" என்கிற ஜயகோஷங்களால்-திருப்தி அடைந்து விடவில்லை.

பிரச்சாரம் நடந்தது! — ஆனால், அவை, காங்கிரஸ்காரர்களின் பெருமைகளைப் பரப்ப பயன்பட்டதே தவிர, அவர்கள் சாதித்த காரியங்கள் குறித்து எவ்வித பிரச்சாரமும் செய்யவில்லை — அதாவது செய்யக்கூடிய அளவில், எத்தகைய காரியங்களையும் சாதிக்கவில்லை.

இந்த உண்மையை மறைக்கும் திருப்பணியில், தேசிய ஏடுகள் முயலுகின்றன.

தினசரியார் : வேதனைப்படுகிறார், பிரச்சாரம் இல்லாததால் தான் மூக்கறுபட்டோம் என்பதாக. கல்கியார் கதறுகிறார் — எதிர்ப்பிரச்சாரம் வெற்றி பெற்றுவிட்டது, என்பதாக.

எதிர்ப்பிரச்சாரம், வெற்றி பெற்றதென்றால், வாக்கு சாதுர்யத்தால் அல்ல; அப்படி எதிர்ப்பிரச்சாரம் செய்தோர் எது சொன்னாலும், நம்பிவிடாது நாடும்.

சோளத்தைக் காட்டி இது கிச்சிலிச் சம்பாவெனில் நம்பியா விடுவர், எருக்கமலர் காட்டி இது சாதிமல்லிகையென்று பிரச்சாரம் செய்ய முடியுமா! ஆகவே, காங்கிரஸ் மூக்கறுக்கப்பட்டதற்குக் காரணம், அவர்கள் மக்களை மறந்ததும் ஆட்சிபீடம் ஏறி அல்லல்களை வளர்த்ததும், சட்டசபை பிரதிநிதிகளானோர் மக்களுடன் தொடர்பு கொள்ளாததும்தான்.

இந்தப் பழியை நீக்க — துயரமுகத்தோர், ஏதேதோ பேசுகிறார்கள்.

காங்கிரஸ் கெட்டு விட்டது— இந்த உண்மையை எல்லோரும் உணர்ந்து விட்டார்கள். சுயநலக் கூடாரம் அது, சுகபோகிகளின் மாளிகை, முதலாளிகளின் கேளிக்கை மாடம், — காங்கிரஸ்! அதன் பெருமையைக் காப்பாற்ற, காரணங்கள் கண்டுபிடித்து, புது வேலையில் இறங்கும் தேசியத் திருவாளர்களைக் காணப் பரிதாபப்படுகிறோம் — அன்புள்ளத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம், கடலெல்லாம் நிறைவெள்ளமானாலும் சுவை பெற்ற காவிரியின் ஊற்றாக முடியாது! காகங்கள் கோடி கூடி தொனி செய்தாலும் ஒரு கருங்குயிற்றொனியாகாது! படக்கின்ற பேய்ச்சுரை சொரிந்தபழம், பலாச்சுளைக்கு இணையாவது சாத்தியமல்ல! வளரும் புதுமலர்ச்சியோடு போட்டியிட, இனி காங்கிரசால் முடியாது! முடியாது!!

❋


## நன்றி அறிவிப்பு

சென்னை அசெம்பிளி விழுப்புரம் — வளவனூர்—கண்டமங்கலம் தொகுதிக்கு என்னை ஆதரித்து வெற்றி தந்த வாக்காளர்களுக்கும், இதர நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

V. R. நாகராஜன் B. A., B L

விழுப்புரம்

# திராவிடநாடு

காஞ்சி] 3—2—52 [ஞாயிறு


## பளு அதிகரித்தது ! பாலம் முறிந்தது !

★

“டில்லி! டில்லி!!”

குதுகலத்தோடு, அசோகச்சக்கரம் பொறிக்கப்பட்ட மூவர்ணக் கொடி பறந்தது, ‘டில்லியில்’. அதன் அருமை பெருமைகளைக் கண்டோர் திகைத்தனர்.

எவ்வளவு பெரியது! பிரம்மாண்டமானது!!’ என்று பேசாதாரில்லை.

‘டில்லியென்றால் டில்லிதான்’— இதே பேச்சு எங்கும்.

புகழ்மாலை! ஆரவாரம்!! பெருமைக் குரல்!!! டில்லி, பெருமிதத்தோடு, நின்றது.

திடீரென, ஒரு பெரும் சப்தம்— மளமளவென்று மக்கள் சாய்கின்றனர், ‘டில்லி’ கண்டு பூரித்துத் திகைத்தோரில் பலர், வீழ்ந்தனர், அலையும் சுறாவும் உலவும் கடலில். ஆனந்த ஆரவாரம்—ஒடுங்கிற்று. கண்ணீர்! கதறல்!! ‘ஐயோ! ஐயோ!!’ என்கிற அவல நாதம்! எட்டுபேர் பிணமாயினர்—மகிழ்ச்சி மாறிற்று— துயரம் படர்ந்தது!

ஜனவரி 26 – இந்திய குடியரசு தினத்தன்று, கல்கத்தாவில், ‘டில்லி’ எனும் பெயர் கொண்ட கப்பலைக் காணச் சென்ற மக்களில், 75 பேர் கடலில் வீழ்ந்ததாகவும், எட்டுபேர், செத்ததாகவும் துயரச் செய்தியொன்று கண்டோம். கப்பலைக் காணச் சென்றோர்–கரையிலிருந்து கப்பலுக்குப் போகும் பாலத்தில் சென்று கொண்டிருந்த போது பாலத்தின் கைப்பிடி உடைந்ததால், கடலில் விழ நேரிட்டதாம். ‘ஏராளமான கூட்டம்—நெருக்கியடித்துக் கொண்டு சென்றனர் — பளுதாங்கவில்லை! பாலம்உடைந்தது!!’ என்று, சம்பவம் பற்றி, சர்க்கார் தெரிவித்திருக்கிறார்கள்.

நெஞ்சைக் கலக்கும் இந்நிகழ்ச்சி நம்மைச் சிந்திக்கச்செய்தது. மகிழ்ச்சியோடு, ‘டில்லி’யின் பெருமையால் கவரப்பட்டு, சென்றோர்—பிணமானோர்கள். காரணம்,

பளுதாங்கவில்லை! பாலம் முறிந்தது!! ஒரே கூட்டமாகச் சென்று, குவிந்து கொண்டதால், அவர்களில் எட்டுபேர் வாழ்வு, மூடப்பட்டுவிட்டது—வீசியடிக்கும் அலைக்கும் சுழன்று திரியும் சுறாவுக்குமிடையே, வீழ்ந்து விட்டனர்.

சுதந்திர நாளில் கிடைத்த துயரமான, இத்தகவல், நம்மை ஆழ்ந்த சிந்தனையில் தள்ளிற்று. பளுதாங்கவில்லை—ஆகவே பாலம் முறிந்தது! இது ‘டில்லி’ கப்பலில் நடைபெற்ற சம்பவம்—இதே ‘கதி’ தானே ‘டில்லி’ சர்க்காரிலும் இருக்கிறது.

ஜன 26—சுதந்திர நாள்! டில்லி சர்க்கார், தம்வசம், அதிகாரங்களைக் குவித்துக்கொண்டு சென்ற இரண்டாண்டுகள் முடிந்து, மூன்றாவது ஆண்டுமுகிழ்த்ததினம்! — அன்று, நமக்கு கிடைத்த துயரச் செய்தி, பளுதாங்கவில்லை, பாலம் முறிந்தது, என்பது!

கப்பலுக்கு என்று மட்டு மல்ல எதற்குமே, சக்தியளவுக்குத்தான், தாங்கும் சக்தியும் உண்டு. ஆடுகளை வண்டியில் பூட்டினால்—வண்டி நகராது என்பது மட்டுமல்ல—ஆடுகள் மறுநாள் கசாப்புக் கடையில்தான் கிடக்கும்! விரலின் மீது கருங்கல் அம்மியை ஏந்த முடியாது! மூங்கில் கழி மீது முன்னூறுபேர் — அமர்வது சாத்தியமில்லாத காரியம்! — தாங்கக்கூடிய சக்திக்குமேல் பாரத்தைச் சுமந்தால், பாலம் முறியத்தான் செய்யும்— பலர் வேதனைப்படத்தான் நேரும்.

டில்லி — அதிகாரச் சுமையால், வளைந்து கிடக்கிறது. ‘இந்தியபூமி அத்தனையும் ஒரே நாடு’ என்ற எண்ணத்தில், மாகாணங்களை யெல்லாம், கைப்பிடியில் வைத்து ஆட்டி வருகிறது. இந்தக் கோர ஆட்டத்தால், நாம், பட்டுவரும் கஷ்டங்களை அடிக்கடி குறிப்பிட்டு வருகிறோம். ஆனால், இன்னும், நம்மவர்களில் பலரோ, ‘ஆசையும் மோகமும்’ அகலாத நிலையில், இருந்து வருகின்றனர்.

இந்தியா முழுமைக்கும் ஒரே சட்டம் என்று கூறி, காங்கிரஸ் மூலவர்கள் செய்து வைத்த, இந்திய அரசியல் திட்டம், நம்மை டில்லிப் பிடிக்கு 1950 ஜனவரி 26-முதல் அடிமைப் படுத்தினர். அந்த நாள்

முதல், இந்திய அரசியல் திட்
நமது வாழ்க்கைத் துறைகளி
லாம்—புயலை எழுப்பிவருகி
நாம், புண்படுத்தப்பட்டே வ
ரோம். உணவு, நூல், வகுப்பு
நிதிவியவகாரம் — அத்தனையி
நாம்பட்டுவரும் பாடு கொஞ்சம

நாம் வரி செலுத்துகிறோம்
ஆனால் அதைப்பெற்றச் செல்
‘டில்லியோ’ அதற்கான பல
தருவதில்லை மாறாக, சென்
உதவி கோரினாலோ ‘சீ! சீ!!’ என்
விரட்டுகிறது

இந்த வேதனைக் காட்சி
கடந்த ஓராண்டில், மிகமிக அ
வித்திருக்கிறோம். நாம் கூறி
சிறிய காங்கிரஸ் அமைச்சர்க
டில்லியின் தர்பார் குறித்து வெ
படையாகப் பேசத் தலைப்பட்ட
கள். அண்மையில அண்ணும
பல்கலைக் கழகப் பட்டமளி
விழாவில் பேசிய போது
அமைச்சர் கோபாலரெட்டி க
ஞர், “இந்திய சர்க்கார் மாமி
போல நடந்து கொள்கிறது—ம
ணங்களை மருமகள் போல நட
கிறது” என்று. ‘கொடுமை செ
றது—டில்லி’—இன்று, இந்த உ
மையை, எவரும், மறுக்கமுடியா

‘ஒரே நாடு’ என்கிற வீண்
பத்துக்காக, ஐந்து கோடி மக்க
அவதிப்படுத்தப்படுகிறோம்–என்
ஒழிவது இங்நிலை! எப்போது நா
சுதந்திரமாக உலவுவது!!

“பிரிவினையா? சேச்
இதென்ன பேச்சு!” என்
பதைப்போரும்—இருக்கி
கள், நம்மவரில். அந்தப்பெ
வர்கட்கு, பாகிஸ்தானைப் பா
பசுஞ்சோலையாக இல்லையா கேள்
என்று நம்மால் காட்டமுடியும். ம
யதரைக்கடலிலே—உள்ள சிறு ந
பாலஸ்தீனம் — இரண்டாகி, பு
தாக உருவாகிய இஸ்மேல் என்
நாடு, சீரும் சிறப்புடன் வி
காமலில்லை.

புதிதாக நாடுகள் உருவாவது
அமைக்கப்படுவதும் — முடிய
காரியமல்ல; கூடாத செயலுமல்
நாடுகளை அமைப்பது என்பத
பொருள், ‘இதுவரைக்கும்’ என்
ஒரு எல்லையை வகுத்துக்கொண்
அந்த எல்லை வரைக்கும் ஆட்சிபு
வதுதான். இந்த எல்லைக் கோ
டால்தான்—உலகில், பலநாடுகளை
காண முடிகிறது. பலநாடுகள் மட்

மல்ல—ஜெர்மனி, போலந்து போன்ற நாடுகளில் இரண்டு சர்க்கார்கள் கூட ஆட்சி புரிகின்றன, ரஷ்யாவுக்கு ஒரு பாகமும் மற்றொரு பகுதி நேசநாடுகளின் மேற்பார்வையிலும் என்ற முறையில். ஒருமொழி பேசும் நாடுகளிலேகூட, சந்தர்ப்பவசம் காரணமாக, ஒன்றிற்கு மேற்பட்ட சர்க்கார்கள் இயங்கும் நிலை ஏற்பட்டிருக்கும் போது, கலை, மொழி, வாழ்க்கைத்துறை, இத்தனையிலும் தனித்த ஒருஜன சமுதாயம், ஏன் தனக்கென ஒரு அரசு அமைத்து வாழமுடியாது? பொருள் வளம் உண்டு இங்கே, விளைநிலம் ஏராளம், உழைப்போர் மிக அதிகம் ரசாயனப் பொருள்கள் இல்லையென்று கூறமுடியாது, வாணிபத்துக்கு மூன்று பக்கம் கடல் உண்டு—இருந்தும், ஏன், இன்னொருவருக்குவரிசெலுத்தி, பலனும்பெறாமல் வாடி வருந்தி சாகவேண்டும்?

உலகம் — வெகுவேகமாக முன்னேறிக்கொண்டே போகிறது. இளைஞர்களின் முழக்கங்களை, எங்கும் கேட்கிறோம். புதுமை அரும்பு இதழ் விரிக்கிறது! இன்ப மணம் பரவி மகிழ்விக்கிறது'' அத்தகைய காட்சியை, மாடியும் குடிசையும் நிறைந்து விளங்கும் இந்தப் பூமியில் நாம் காணவேண்டாமா! சிறுநாடுகள் எவ்வளவோ, சீரும் சிறப்புடன் வாழும்போது, நமக்கென ஒருநாடு அமைத்து அதைப் பாதுவுடைமைச் சோலையாக்கி, அங்கே 'பொன்வண்டு'களாக நாம் ஏன் திரியக்கூடாது!

* * *

அமர்க்களம், ஆட்டபாட்டம் எதுவுமின்றி, மூன்றாவது குடியரசு ஆண்டு, ஆரம்பமாகிவிட்டது. சட்டிடங்களிலேமட்டும் அன்றைய தினம் தீபாலங்காரங்கள் விளங்கின! ஆனால், மக்கள் முகத்திலோ ஒளியில்லை—மக்கள் மத்தியில் மட்டுமல்ல; மக்களை ஐந்தாண்டுகளாக வதைத்த காங்கிரசாருக்கும் மகிழ்ச்சியில்லை. தோல்வியால், துவளுகிறார்கள்—அவர்கள்; மக்களோ, இத்தனை ஆண்டுகளாக தாம்பட்ட வேதனையால் நெளிகிறார்கள். அரசியல் யூகிகள் இதயத்திலே ஒருபக்கம் மகிழ்ச்சியும் மற்றோர் பக்கம் மருட்சியுமாக மாறி மாறி வீசிக்கொண்டிருக்கிறது! ஆனால் நாமோ இன்ப உள்ளத்துடன், கதிர் காணும் உழவனைப்போல எதிர்காலத்தின் மீது விழிகளை வைத்துக் கிடக்கிறோம்.

எதிர்காலம்—நமது இலட்சியத்தைப் பொறுத்தவரையில் ஒளிக்காடாகக் காட்சி அளிக்கிறது. ஒருபோது தூற்றிவீசப்பட்ட நமது கொள்கைகள் சுடர்விளக்குபோல—திருவிடத்து குடும்பங்களிலே, ஒளிவிடத்துவங்கிவிட்டன. ஒவ்வொரு இதயமும் "திராவிடம்! திராவிடம்!!" என்கிற மூச்சுகளைவிட்டுக் கொண்டேயிருக்கின்றது. நமது கொள்கை—உலராத மலர்! அதை உருவாக்கி, இன்பம்பெற, தத்தமது உயிர்களை அர்ப்பணித்துவிட்ட இலட்சக்கணக்கான இளைஞர்களைக் காண்கிறோம். பகுத்தறிவுப் படை பெருகுகிறது!!

அதே நேரத்தில், திராவிடம் பிரிவதற்கான உரிமைக்குரல், ஆந்திரபூமியிலும், கேரளமாதாவின் மைந்தர்கள் மத்தியிலும், கன்னடக் காளைகளிடத்தும், எழும்பத் துவங்கிவிட்டன. கேரளபூமியின் சுவர்களிலே 'குஜராத்தியே திரும்பிச்செல்!' என்று பண்டிதநேரு பவனி வந்தபோது, எழுதப்பட்டதைக்கண்டு பண்டிதர் பதறினார்! 'இதெல்லாம் ஆகுமோ?' என்றார்!! அங்கே உள்ள ஏடுகள், நமது எண்ணங்களைப் பிரதிபலிக்கத் துவங்கிவிட்டன.

ஒரு பக்கம் — கொள்கை வளருகிறது.

மற்றோர் பக்கம் — டில்லி சுமை தாங்கமாட்டாது தத்தளிக்கிறது.

டில்லிக்கு, அதிகாரப் பளுவைத் தாங்குவதால், ஏற்படும் சங்கடங்கள், விரிந்தவண்ணமே உள்ளன. டில்லிக்குக் கட்டுப்பட்டிருக்கும் பற்பல மாகாணங்களிலும், அதிருப்திப்பொறி, எழும்ப ஆரம்பித்துவிட்டது. மராட்டிய மக்கள் பம்பாயிலே உரிமைக் கோரிக்கை எழுப்புகின்றனர் — பஞ்சாப், சீறுகிறது டில்லிதர்பார் கண்டு — வங்கம் குமுறுகிறது — இந்திய சர்க்கார் போக்கு கண்டு.

இந்த நெருக்கடிகளுடனே, மூன்றாவது குடியரசாண்டு துவங்குகிறது—டில்லியும் அதிகாரச் சுமை ஒருபக்கம், நெருக்கடி மற்றோர் பக்கம் தாக்க, திண்டாடும் நிலை வளர்கிறது.

பளுஅதிகரித்தது! பாலம்முறிந்தது!!

இந்தக் காட்சியுடனே துவங்கும், இந்த ஆண்டில், நாம் நமது சக்திகளை ஒன்று படுத்தவேண்டும். 'டில்லி கப்பல்' நிகழ்ச்சி, டில்லி சர்க்காருக்கு, நமது சக்திகள் வளர்ந்தால், நிச்சயம் ஏற்பட்டே தீரும்.

பளு அதிகரிப்பதால் விளையும் கேட்டை 'டில்லி' சொல்கிறது. இந்த எச்சரிக்கையை, மமதையின் மத்த நிலையிலிருக்கும், டில்லிபீடம் உணராது—எளிதில்.

அது, உணருமாறு செய்வோம்! திருவிடத்தைக் காண்போம்! இதயங்களை இரும்பாக்கிக்கொள்வோம்!! எதையும் தாங்கி—இன்பபுரிப் பயணம் புறப்படுவோம்!!! —

## மகிழ்கிறோம்

இந்திய சர்க்காரின் அமைச்சர் கே சந்தானம், ரயில்வேத் தொழிலாளர் தலைவர் கே. அனந்தநம்பியாரால் முறியடிக்கப்பட்ட செய்தி கேட்டு, மகிழ்கிறோம். திமிரும், ஆணவமும் கொண்டலைந்த அதிகாரத்திமிருக்கு, தஞ்சைத்தரணி நல்லோர், பாடம் தந்துவிட்டது. தோழர் சந்தானத்தால், ரயில்வே நிர்வாகமும், தொழிலாளர் தோழர்களும், அடைந்த சங்கடங்களுக்கு தக்க 'பரிசை' மாயவரம் தொகுதி மக்கள், தந்துவிட்டார்கள். தங்களது 'இஷ்டஜன பந்துமித்திரர்களின்' சொந்தச் சொத்தாக, ரயில்வே இலாகாவை, ஆக்க முயன்றதில் பெரும் பங்கு, தோழர் சந்தானத்துக்கு உண்டு. கொடுமை நிலைக்காது! என்பதை அவரது வீழ்ச்சி, உலகுக்கு அறிவிக்கிறது.

அதோடு, டில்லி சபைக்கு, தனித்தொகுதிக்குப் போட்டியிட்ட திட்டை சுப்பிரமணியம், என்கிற தஞ்சைமாவட்ட காங்கிரஸ் தலைவரை, தோழர் தொண்டு' வீராசாமி, பி. ஏ., தோற்கடித்திருக்கிறார். மக்களுலகை மண்ணென மதித்த காங்கிரஸ் பாசிசத்திற்கு, சரியான எச்சரிக்கை, புதுமை உலகால் தரப்பட்டிருக்கிறது.

---

போங்கல் வாழ்த்து அனுப்பி, பூரிக்கச் செய்த அனைவருக்கும் எனது அன்பு வணக்கங்கள்.

அரங்கண்ணல்.

# டில்லியின் 'பட்டியல்!

இந்த ஐந்தாண்டுக் காலத்தில், தாங்கள் செய்திருக்கும் பெரிய திட்டங்கள்பற்றிய விளக்கம் ஒன்றை, டில்லி சர்க்கார், இந்திய குடியரசு தினத்தன்று வெளியிட்டிருக்கிறார்கள் — தங்கள் செய்தி இலாகாமூலம். அந்த விபரங்களைக் கீழே தந்துள்ளோம்.

மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான திட்டங்களை மேற்கொண்டு, அவைகளை உடனடியாக நிறைவேற்றுவதே, விடுதலைபெற்ற எந்த சர்க்காரும், முதலில் செய்யவேண்டிய காரியமாகும்.

ஆனால் 'டில்லி' மேற்கொண்ட காரியங்கள் எவை, அதனால்யாருக்கு லாபம், என்பவைகளை, தோழர்கள் சிந்திக்கவேண்டுமெனக் கோருகிறோம்.

'டில்லி' குறிப்பிட்டுள்ள இத்திட்டங்களில் முதலாளித்துவ முதலைகளும், சலுகை பெற்றிருக்கின்றன — அதுவும் வடநாட்டு திமிங்கிலங்கள்.

இத்திட்டங்களில்; வடக்குக்கும் தெற்குக்கும் உள்ள நிலையை, தோழர்கள் சிந்தனைக்கு வைக்கிறோம்.

## எரு உற்பத்தி சாலை

ஆசிய உபகண்டத்திலேயே மிகப் பெரிதெனக் கூறப்படும் இத் தொழிற்சாலைதான், டில்லியின் திட்டங்களில் முதன்மை வகிப்பது. சுதந்திரமடைந்த உடன், மேற்கொண்ட முதல் திட்டமும் இதுதான். இது நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இடம் பீகார் மாகாணம்—தாமோதர் நதியின் வடகரையில் உள்ள தான்பாத் நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து 15 மைல் தூரத்திலிருக்கும் பிரம்மாண்டமான தொழிற்சாலை, இது.

இந்தத் தொழிற்சாலையை நிர்வகிக்க, "ஸிந்திரி பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட்" என்ற பெயரில், 30 கோடி ரூபாய் மூலதனத்துடன் தனிக் கம்பெனியொன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தக் கம்பெனியின் பங்குகளில் ஒன்றே ஒன்று தவிர பாக்கியெல்லாம் குடியரசுத் தலைவர் பெயரில் உள்ளன. அந்த ஒரு பங்கு மாத்திரம், சட்டட — உற்பத்தி — சப்ளை மந்திரி காரியாலய காரியதரிசி மி. ஸி. ஸி. தேஸாயின் பெயரில் உள்ளது. மி. தேஸாயே இக்கம்பெனியின் டைரெக்டர்கள் போர்டின் தலைவராக இருக்கிறார். மி.ஜே. ஜே. காந்தி, மி. ஸ்ரீராம் மி. ஸ்ரீநாராயணன்மஉற்தா, மி கே. ஆர். பி. அய்யங்கார், மி. பி. ஸி. முகர்ஜி (நிர்வாக டைரெக்டர்) ஆகியோர் கம்பெனியின் மற்ற டைரெக்டர்கள்.

## டெலிபோன் கேபிள் உற்பத்தி

இந்தியாவுக்கு வேண்டியிருக்கும் டெலிபோன் முழுவதும் தற்போது வெளி நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டுவருகின்றன. இந்திய சர்க்கார் தபால்—தந்தி இலாகாவுக்கு 1951—52—லிருந்து ஆண்டு தோறும் மொத்தம் சுமார் 80 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள டெலிபோன் கேபிள்கள் தேவையாயிருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. ஆகவே, இந்தக் கேபிள்களை லாபகரமாக உற்பத்தி செய்யும் ஆசையுடன் இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நோக்கத்துடன் இந்திய சர்க்கார் பிரிட்டனிலுள்ள 'ஸ்டாண்டர்ட் டெலிபொன்ஸ் அண்ட் கேபிள்ஸ் லிமிடெட்' கம்பெனியுடன் 1949 நவம்பர் 30—ல் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டனர். இந்தத் தொழிற்சாலையை நிர்மாணிக்க ஒரு கோடி ரூபாய் செலவாகுமென்றும், மொத்தம் சுமார் ரூ. 80 லட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் வரை பெறுமானமுள்ள கேபிள்கள் இதில் உற்பத்தி செய்யமுடியுமென்றும் மதிப்பிடப்படுகிறது.

இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படும் இடம் மேற்கு வங்காளம்— ரூப்நாராயண் என்ற ஊரில் கட்டிடங்கள் கட்டத் துவக்கப்பட்டுவிட்டது. இத்தொழிற்சாலை மூலம் ஆண்டு தோறும் ரூ 22 லட்சம் லாபம் கிடைக்குமென நம்பப்படுகிறது.

## பெனிஸிலின் உற்பத்தி

இந்தியாவில் பெனிஸில்லின் மருந்து உற்பத்தி சாலையொன்று அமைக்கப்படுவதன் மூலம், பொது சுகாதார அபிவிருத்திக்குப்பெரிது பயன்படக்கூடிய முயற்சியொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. உலக சுகாதார ஸ்தாபனமும், ஐ. நா. சர்வதேசச் சிறுவர்களுக்கான அவசிய நிதியும் பண உதவியும் தொழில் நுட்ப உதவியும் அளிக்க முன் வந்ததை ஏற்றுக்கொண்டு இந்திய சர்க்கார் 1951 ஜூலையில் இவ்விரு ஸ்தாபனங்களுடனும் ஒரு உடன்பாடு செய்து கொண்டுள்ளனர்.

இதன்படி, இந்தியாவில் பெனிஸில்லின் மருந்து உற்பத்தி சாலையை நடத்துவதற்கான இடம், தொழிற்சாலை, நிர்வாகக் காரியாலயங்களுக்கான கட்டடங்கள் முதலிய வசதிகளை இந்திய சர்க்கார் செய்து கொடுப்பதென்றும், ஐ. நா. சர்வதேசச் சிறுவர்களுக்கான அவசர நிதி 8,50,000 டாலர் பெறுமானமுள்ள, யந்திர சாதனங்களை வெளிநாடுகளிருந்து சப்ளை செய்வதென்றும், உலக சுகாதார ஸ்தாபனம் 3,50,000 டாலர் செலவில் தொழில் நுட்ப உதவி அளிப்பதென்றும் ஏற்பாடாகியிருக்கிறது. 1953 இறுதியில் உற்பத்தி துவங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மத்தியில், உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, மொத்தமாக இறக்குமதி செய்யப்படும் பெனிஸில்லினை, புட்டிகளில் அடைப்பதற்கான யந்திர சாதனமொன்று பம்பாயில் ஹா... கின் ஸ்தாபனக் கட்டடத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சாதனத்தின் உதவிகொண்டு தினமும் 15,000 புட்டிகளில் பெனிஸில்லின் அடைக்கமுடியும். இந்தத் தொழிற்சாலை 1951 ... 28-ந் தேதி வேலை துவங்கியது. இத் தொழிற்சாலை அமைக்கப்படும் இடம், பம்பாய்!

### ...ல் கட்டும் துறை

...ந்தியா கப்பல் கம்பெனிக்குச்
...ந்தமான, விசாகபட்டினம் கப்
...கட்டும் துறையில் வேலை
...த்துவந்த தேர்ச்சி பெற்ற சிப்—
...கள், சிதறிப்போய் விடாமல்
...க்கும் பொருட்டு, நாட்டின்
...துநலன் கருதி, அந்த இடத்
...கப்பல்கட்டும்வேலை தொடர்ந்து
...பெற்று வரும்படி செய்வதென
...திய சர்க்கார் முடிவு செய்து,
...00 டன் நிறைகொண்ட மூன்று
...கேற்றிக் கப்பல்கள் கட்டிக்
...டுக்க 1950 பிப்ரவரி 25ந் தேதி
...று ஸிந்தியா கம்பெனிக்கு ஆர்
...கொடுத்தனர்.

...பிரிட்டிஷ் கப்பல் துறையில் 42
...சம் ரூபாய் செலவில் கட்டி
...க்கக் கூடிய ஒரு கப்பலை விசாக
...டினம் கப்பல் துறையில் கட்டி
...ப்பதற்கு சுமார் 64 லட்சம்
...லவாவதாகத் தெரியவந்தது.
...தியக் கப்பல் தொழிலின் நல
...் கருதி, விசாகப்பட்டினத்தில்
...ன்று கப்பல்கள் கட்டுவதென்
..., இவை ஒவ்வொன்றுக்கும்
...ர் 22 லட்ச ரூபாய் சகாயத்
...கை வழங்குவதன் மூலம்
...ற்றை பிரிட்டிஷ் கப்பலின்
...க்கே இந்தியக் கம்பெனிக்கு
...னை செய்வதென்றும் சர்க்கார்
...மானித்தனர். ஏற்கெனவே கட்டி
...க்கப்பட்டுள்ள இம்மூன்று கப்
...சீக்கிரத்திலேயே மற்ற இந்தி
... கம்பெனிகளுக்கு விற்கப்பட
...க்கிறது. இதே ஏற்பாடுகளின்
... மேலும் மூன்று கப்பல்கள்
...டிக் கொடுக்க 1951 ஆகஸ்டில்
...ர் கொடுக்கப்பட்டது.

...சாகபட்டினம் கப்பல் கட்டும்
...றையின் நிர்வாகத்தை ஏற்று
...த்த தனிக் கம்பெனியொன்றை
...வ இந்திய சர்க்கார் ஏற்பாடு
...து வருகின்றனர். இந்தக் கம்
...னியில் இந்திய சர்க்கார் ஒரு
...ஸ்தாராக இருப்பார்கள். மேலும்
...கமாகவும், மேலும் உயர்தர
...வும் கப்பல்கள் கட்டுவதற்கு,
...சியமானால், வெளிநாட்டு கப்
... கட்டும் ஸ்தாபனங்களின் உதவி
...ப் பெறவும் இந்திய சர்க்கார்
...தேசித்துள்ளனர்.

### ...தயாரிப்பு

...டில்லிக் கருகிலுள்ள சர்க்காருக்குச் சொந்தமான வீடு தயாரிப்புத் தொழிற்சாலையை, குறைந்த செலவில் வீடுகள் கட்டுவதற்கும், கட்டட சாமான்கள் தயாரிப்பதற்கும் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாமென்பது பற்றி சர்க்கார் ஆலோசித்து வருகின்றனர். இது சம்பந்தமாக ஸ்வீடிஷ் கம்பெனியொன்றுடன் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. அந்தக் கம்பெனியின் பிரதிநிதிகள் இப்பொழுது புதுடில்லிக்கு வந்துள்ளனர். இந்தப் பேச்சு வார்த்தைகளில் இந்தியக் கம்பெனியொன்றும் கலந்து கொள்ளுகிறது. கூரை சாமான்கள், அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் ஆகியவை செய்வது பற்றியும் ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

### சித்தரஞ்சன் எஞ்சின் உற்பத்திசாலை

இந்திய ரயில்வேக்களுக்கு வேண்டிய எஞ்சின்களை இங்கேயே உற்பத்தி செய்துகொள்ளும் நோக்கத்துடன், ரயில்வே மந்திரி காரியாலயம், மேற்கு வங்காளத்தில் அஸன் ஸோலுக்கருகில் சித்தரஞ்சன் என்ற இடத்தில் ரயில்வே எஞ்சின் உற்பத்திசாலை யொன்றை நிர்மாணித்திருக்கிறது. இந்தத் தொழிற்சாலையைக் கட்டி முடிக்க மொத்தம் 14.93 கோடி ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதுவரை சுமார் 12½ கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. வருஷத்துக்கு 120 எஞ்சின்களும் 50 பாய்லர்களும் தயாரிக்கக் கூடிய இந்தத் தொழிற்சாலை கட்டப்பட்டிருக்கிறது. தொழிற்சாலையில் உற்பத்தி 1956ல் இந்த உச்ச அளவை எட்டிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உற்பத்தி வேலைகளுக்கு மொத்தம் சுமார் 20,000 டன் எஃகு வேண்டியிருக்கும். இதில் 80% லிருந்து 90% வரை இந்தியாவிலேயே கிடைத்துவிடுமென்று நம்பப்படுகிறது.

சித்தரஞ்சன் தொழிற்சாலையில் இதுவரை 20 கூட்ஸ் எஞ்சின்கள் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்கனவே உபயோகித்து வருகின்றன. நடப்பு வருஷத்தில் 38 எஞ்சின்களும், 1953ல் 52 எஞ்சின்களும் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. கட்டி முடிக்கப்பட்டதும், இதுவே ஆசியாவிலேயே மிகப் பெரிய ரயில் எஞ்சின் உற்பத்திசாலையாக இருக்கும்.

இந்தத் தொழிற்சாலையில் தற்போது சுமார் 2850 தொழிலாளர்கள் வேலை செய்துவருகின்றனர். பூரணமாக அபிவிருத்தியடைந்ததும் மொத்தம் சுமார் 4,400 தொழிலாளர்கள் இருப்பார்கள் என்று மதிப்பிடப்படுகிறது. அப்பியாசிகளைப் பயனுவிப்பதற்காக, தொழில் நுட்பப் பள்ளிக்கூடமொன்றும் இங்கு இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### விமான உற்பத்திசாலை

இந்தியாவில் விமான உற்பத்திசாலையொன்றை அமைக்க வேண்டியதன் அவசியம் 2-வது உலக யுத்தம் ஆரம்பமான பிறகே உணரப்பட்டது. வால்சந்த் ஹீராசந்த், இந்தியாவில் விமானம் உற்பத்தி செய்வதற்காக, 4 கோடி ரூபாய் அங்கீகாரம் பெற்ற மூலதனத்துடன், "இந்துஸ்தான் ஏற்கிராப்ட் லிமிடெட்" என்ற பெயரில் புதிய கம்பெனியொன்றை 1940 டிசம்பரில் பங்களூரில் ஆரம்பித்தார். 1942 ஜூனில், இந்திய சர்க்கார், அந்தக் கம்பெனியின் நிர்வாக ஏஜெண்டுகள் பங்குகளைத் தாங்கள் வாங்கிக்கொண்டு, கம்பெனியின் நிர்வாகத்தைத் தாங்களே மேற்கொண்டனர். 1943 செப்டம்பரிலிருந்து யுத்தம் முடியும்வரை, இந்தத் தொழிற்சாலை விமானப் படையின் விமானங்களைப் பழுது பார்த்து செப்பனிடுவதற்கே பயன்படுத்தப்பட்டு வந்தது. யுத்தம்முடிவடைந்த பிறகு, இந்தக் கம்பெனி, இந்திய சர்க்காரும் மைசூர் சர்க்காரும் மாத்திரமே பங்குதாரர்களாக உள்ளதொரு கம்பெனியாக மாற்றியமைக்கப்பட்டது. விமானம் உற்பத்தி செய்வதற்கு சர்க்காரின் ஸ்தாபனமாக இப்பொழுதிருந்து வரும் இந்தத் தொழிற்சாலையின் நிர்வாகம் பாதுகாப்பு மந்திரி காரியாலயத்தின் மேற்பார்வையில் இருந்து வருகிறது.

விமானப்படைக்கும், சிவில்விமானப் போக்குவரத்துக்கும், பயிற்சி வேலைகளுக்குப் பயன்படக்கூடிய எச். டி—2 பயிற்சிவிமானமொன்றை இந்துஸ்தான் விமான உற்பத்திசாலை தயாரித்திருக்கிறது. இந்திய விமானப் படைக்கு பெர்ஸிவல்

விமானக் கம்பெனியுடன் செய்து கொண்டுள்ளதொரு ஒப்பந்தத்தின்படி, பாகங்களை இணைத்துத் தயாரித்துக்கொடுப்பதிலும், உற்பத்தி செய்வதிலும் இந்தத் தொழிற்சாலை அதிக முன்னேற்றமடைந்திருக்கிறது. சிவில விமானம் போக்குவரத்துக் கம்பெனிகளுக்குச் சொந்தமான டகோடா விமானங்களைப் பழுது பார்த்து செப்பனிட்டுக் கொடுக்கும் வேலையையும் இந்தத் தொழிற்சாலை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இவை தவிர, இந்திய ரயில்வேக்களுக்கு 3-வது வகுப்புப் பிரயாண வண்டிகள் கட்டிக்கொடுக்கவும் இந்தத்தொழிற்சாலை ஒப்புக்கொண்டிருக்கிறது. ஏற்கனவே 200 வண்டிகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

## டெலிபோன் உற்பத்தி

இந்தியாவுக்கு வேண்டிய டெலிபோன் கருவிகளெல்லாம் இப்பொழுது இந்தியாவிலேயே உற்பத்திசெய்யப்படுகின்றன. இவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது முற்றிலும் நிறுத்தப்பட்டுவிட்டது. பங்களூரிலுள்ள இந்திய டெலிபோன் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் கம்பெனியின் தொழிற்சாலையிலும் தபால்—தந்தி இலாகாவின் பட்டறைகளிலும் இப்பொழுது டெலிபோன் கருவிகள் தயாரிக்கப்படுகின்றன. 'டயல்'களும் 'கண்டென்ஸர்'களும் இப்பொழுது இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

1940, ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலை மூன்று மாதங்களுக்குள், இறக்குமதி செய்யப்பட்ட பாகங்களை இணைத்து டெலிபோன் கருவிகள் தயாரிக்கத் தொடங்கிவிட்டது. டெலிபோன் நிலையங்களுக்கு வேண்டிய யந்திர சாதனங்களின் பல பாகங்கள் இப்பொழுது இந்தத் தொழிற்சாலையிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. தற்போது வருஷத்துக்கு 25,000 கருவிகள் வீதம் உற்பத்தி செய்ய இதில் வசதியிருக்கிறது. முழு உற்பத்தி துவங்கியதும், 50,000 கருவிகள் உற்பத்திசெய்ய முடியுமென்று கருதப்படுகிறது. ஆனால் தற்போது உற்பத்தி செய்யப்படும் டெலிபோன்களின் எண்ணிக்கை, தேவையையும், வெளிநாடுகளிலிருந்து உதிரி பாகங்கள் கிடைப்பதையும், உள்நாட்டில் கச்சாப்பொருள்கள் கிடைப்பதையும் பொறுத்ததாகவே இருக்கிறது.

இந்தக் கம்பெனி, 2½ கோடி ரூபாய் அங்கீகாரம் பெற்ற மூலதனம் கொண்டதொரு தனிக் கம்பெனியாக, 1950 பிப்ரவரியில் அமைக்கப்பட்டது. மூலதனத்தில் சுமார் 95 சதவிகிதம் இந்திய சர்க்காரிடமும் மைசூர் சர்க்காரிடமும் உள்ளன. பாக்கியுள்ள 5 சதவிகிதமும், இங்கிலாந்தைச் சேர்ந்த 'ஆடோமாடிக் டெலிபோன் அண்ட் எலெக்ட்ரிக் கம்பெனி'யிடம் இருக்கிறது. இதை நிர்வகிக்க 8 டைரெக்டர்கள்கொண்ட போர்டு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் 7 பேர் இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்கள். இந்தியசர்க்கார் செய்திப் போக்குவரத்து மந்திரி காரியாலய காரியதரிசி இப்போர்டின் அக்கிராசனராக இருக்கிறார்.

1951 இறுதிவரை இத்தொழிற்சாலையில் மொத்தம் 40 000 டெலிபோன்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தற்போது மாதமொன்றுக்கு சுமார் 2,000 டெலிபோன்கள்வீதம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## யந்திரக் கருவிகள் உற்பத்தி

யந்திரக் கருவிகள் உற்பத்தி அதிக முக்கியத்துவம் வாய்ந்ததொரு தொழிலாகும். தொழிலபிவிருத்தியடைந்து அதன்மூலம் ஒரு நாடு சுபீட்சமடைவதும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதும், அந்த நாட்டின் யந்திர கருவிகள் உற்பத்தித் தொழிலையே பெரிதும் பொறுத்ததாக இருக்கிறது. யுத்தத்துக்கு முன்பு, இந்தியாவில் யந்திரக்கருவி உற்பத்தித் தொழில் இல்லையென்றே சொல்லிவிடலாம். ஆனால், யுத்தத்தின்போது உற்பத்தி பன்மடங்கு பெருகுகிறது. சுமார் நூறு வீதம் கருவிகளை உற்பத்தி செய்துவந்த இடத்தில் சுமார் 6,000 கருவிகள் உற்பத்தி செய்யப்படலாயின. தரப் பாகுபாடு செய்யப்பட்ட 24 கம்பெனிகளும், தரப் பாகுபாடற்ற சுமார் 100 கம்பெனிகளும் 1941-ல் யந்திரக் கருவி உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. இந்தத்தொழிற்சாலைகளில் உற்பத்தி உச்சத்தை எட்டியிருந்த வருஷத்தில் மொத்தம் சுமார் ஒரு கோடி ரூபாய் பெருமானமுள்ள கருவிகள் உற்பத்தியாயின.

நாடு பிரிவினை செய்யப்பட்ட பிறகு இந்தத் தொழிலில் சிதறிப் போய் உற்பத்தி குறைந்துவிட்டது. தரப் பாகுபாடுகொண்ட யந்திரக் கருவி உற்பத்திசாலைகள் 16-ம், தரப் பாகுபாடற்ற உற்பத்திசாலைகள் 50-ம்தான் இந்தியாவில் மிஞ்சியிருந்தன. ஆண்டுதோறும் இவற்றில உற்பத்தி செய்யப்பட்ட கருவிகளின் மொத்தப் பெறுமானமும் 40 லட்சம் ரூபாய்க்கும் கீழாகக் குறைந்துபோயிற்று. இந்தியாவின் தேவைகளில் மூன்று சதவிகிதத்தைக்கூட இவை பூர்த்திசெய்யமுடியவில்லை. இப்பொழுதுங்கூட மிகச் சாதாரண ரகங்களைச் சேர்ந்த கருவிகள் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. ராணுவத்துக்கும் ரயில்வேக்களுக்கும் தேவைப்படும் நுட்பமான வேலைகளுக்கு உபயோகிக்கப்படும் நவீன யந்திரக் கருவிகளை உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையில் நம்முடைய தொழிற்சாலைகள் இல்லை. ஆண்டுதோறும் மொத்தம்சுமார் 10 கோடி ரூபாய் பெருமானமுள்ள யந்திரக் கருவிகள் இந்தியாவுக்குத் தேவைப்படுவதாக மதிப்பிடப்படுகிறது. ஆகவே, இந்திய சர்க்கார், யந்திரக் கருவி உற்பத்தித்தொழில் ஒன்றை இந்தியாவில் ஏற்படுத்துவதற்குள்ள வசதிகளை ஆராய்ந்து பார்த்து பிறகு பங்களூருக்கருகில் ஜலஉறல்லி என்ற இடத்தில் இந்தத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகளை இப்பொழுது செய்து வருகின்றனர். தொழிற்சாலைக்கு வேண்டிய சில யந்திரசாதனங்கள் வெளிநாடுகளிலிருந்து வந்துகொண்டிருக்கின்றன. இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு வேண்டிய நிலத்தை மைசூர் சர்க்கார் கொடுத்திருக்கின்றனர்.

★

வோர் போறுப்பு

# இருதயம்" பலமாகவேண்டும்!

நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது!,,
பெருமூச்சோடு, சொல்கிறார்கள்,
ட்டின் நலம் விரும்பிகள்.

"ஊழல்களை அதிகமாக்கிவிட்ட
. ஒழுங்கீனம் தாண்டவமாடு
து"

வேதனையோடு, வெளியிடுகிறார்
, ஆட்சி இயந்திரத்திலே அமர்ந்
ருந்து, அதன் சிறப்பையும் கஷ்
டத்தையும் உணர்ந்த, 'மாஜி' அதி
ரிகள்.

"திறமையில்லை— தெரியாததைத்
ரிந்து செய்யவும் புத்தி இல்லை.
ரட்டுத்தனமும் அகம்பாவமும்,
க்கார் நிர்வாகத்தை சீரழித்து
ட்டன."

ஆட்சி முறையும், அது கெடக்
டாதென்கிற ஆர்வமும் கொண்
டார், இபபடிக் கூறுகிறார்கள்,
யம் புண்பட்ட நிலையில்.

* * *

காங்கிரஸ் ஆட்சியின் அஸ்தமன
ம் இது, என்கிற ஆனந்தத்தால்
பலர் இதுபோது, காங்கிர
ட்சியால் ஏற்பட்ட அனர்த்தங்
குறித்து வெளியிடுகிறார்கள்—
னி வருவோராவது எச்சரிக்கை
டு நடக்கவேண்டும் என்கிற
லையில். காங்கிரஸ் ஆட்சிக்காலத்
ல், அவர்கள் செய்த நன்மைகளை
ட தீமைகள் அதிகம், என்பது
ளிவாகத் தெரிந்துவிட்டது. பட்
னிக் குரலும், ஏழ்மை ஆட்டமும்,
வர்கள் ஆட்சியின் அலங்கோலங்
ளாக, உலவிக்கொண்டுள்ளன.
னிந்த கோரம்—நீடிக்கச் செய்
?" என்று, மக்கள் கேட்டால்,
தற்குப பதில்போல, "என் செய்
து? எவ்வளவோ சங்கடங்களைத்
ண்டவேண்டியிருந்தது. என்
ய்வோம்!" என்று சிலரும்,
இதைவிட நன்றாக உங்களால்
ண்டுவிட முடியுமோ?' என்று
லரும், பதில் சொல்லிக்கொண்டு
ருக்கிறார்கள்.

குற்றம் இழைத்தோர்—காங்கிர
ர்.

கொடுமைப்பட்டோர்—மக்கள்.

இந்த உண்மை, காங்கிரசார் என்னதான் விளக்கங்கள் தந்தாலும், தெற்றெனப் புலப்பட்டு விட்டது, உலகுக்கு.

இவ்வளவு இழியும் பழியும் சுமந்த காங்கிரசார், நாட்டுக்குத் தந்திருக்கும் கேடுகளில் மிகமிகக் குறிப்பிடக் கூடியது — நிர்வாகத் துறை சம்பந்தமானதுதான்.

காங்கிரசார், இந்த ஐந்தாண்டுக் காலத்தில், நாட்டுக்குச செய்த பலப் பல துரோகங்களில், குறிப்பிடக் கூடியது, நிர்வாக இயந்திரத்தில் அவர்கள் ஆக்கியிருக்கும் ஊழல்கள்தான்.

* * *

வெள்ளையன், இந்நாட்டை விட்டு வெளியேறியபோது, அருமையான ஒரு நிர்வாக இயந்திரத்தைவிட்டுப் போனான். திறமை மிக்க காரியதரிசிகளையும், ஆற்றல் படைத்த அதிகாரிகளையும், பம்பரமெனச் சுழலக் கூடிய காரியாலயத்தையும் தந்துவிட்டுப் போனான். வெளிநாட்டோர், வியந்து பாராட்டக்கூடிய அளவுக்கு, திறமை மிக்கதெனப் போற்றப்பட்ட சென்னை சர்க்கார் காரியாலயம், அவன், இருநூறு ஆண்டுகள் வளர்த்து, வகையாக்கித் தந்துவிட்டுப் போனதுதான்.

ஆனால், அத்தகைய அருமையான நிர்வாக இயந்திரம், இந்த ஐந்தாண்டுக் காலத்தில், திமிங்கிலத்தின் வாயில் சிக்கிய சிறுமீன் போல, வதைபட்டுக் கிடக்கிறது. அதிகாரிகள் மனமொடிந்த நிலை—சர்க்கார் காரியதரிசிகள் தாங்கள் படும் சங்கடங்களால் தாக்கப்படும் காட்சி—உத்யோகஸ்தர்கள் மிரண்டு கிடக்கும் கேவலம்—மிக மிகப் பெரிது!

வெள்ளையன் ஆண்ட காலத்தில், காங்கிரஸ் தேசிய வீரர்கள், நிர்வாகத்திலிருப்போரை இழித்தும் பழித்தும் வீசிய வார்த்தைகள் ஏராளம்.

"வெள்ளையன் பூட்சை நக்குகிறான், பார்! பார்!!" என்றும், "நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கயவர்கள்!" எனவும், சர்க்கார் அதிகாரிகளை நோக்கி, அவர்கள் வீசிய ஏளனங்களும் கடுஞ்சொற்களும், மிக மிக ஏராளம்.

"நாங்கள், ஆட்சிக்கு வந்ததும் இந்த அதிகார முதலைகளை ஒழித்துக் கட்டுவோம்!" என்று அவர்கள், எழுப்பிய, அர்த்தமில்லாக் கூச்சல், மிகப் பெரிது. அந்த ஆத்திரத்தின் காரணத்தாலேயே, கலெக்டர் ஆபீசுகளைத் தாக்கினர், போலீஸ் அதிகாரிகள் மீது திராவகங்களை வீசினர், தாசில்தார் வீடுகளை தவிடு பொடி செய்தனர், ரிஜிஸ்டிரார் அலுவலகங்களில் தீ மூட்டினர்.

ஆனால் ஆட்சி மாற்றம் கிடைத்த போதுதான், காங்கிரஸ் தலைவர்களுக்கு, ஒரு உண்மை புலப்பட்டது. தாங்கள், ஆர்வத்தால், முன்பு செய்த அடாபிடிகள் பயனற்றவை என்பதையும், காங்கிரசாட்சி ஒழுங்காக நடக்க வேண்டுமானால் அதிகாரிகள் ஒத்துழைப்பு அவசியமென் பதையும், உணரத் தலைப்பட்டனர்.

பட்டேல் பேசினார், "அதிகாரிகள் — திறமைசாலிகள். அவர்கள் ஒத்துழைப்பு மிகமிக அவசியம்" என்பதாக.

நேரு விளக்கங்கள் தந்தார், அதிகாரிகளின் கடமை, அவர் தங்களோடு ஒத்துழைக்கும் போக்கு ஆகியவைகள் குறித்து. ஒவ்வொரு மந்திரிமாரும், அதிகாரிகள் சம்பந்தமான விழாக்களிலும், கூட்டங்களிலும் கலந்துகொண்டு, போற்றிப் பேசினர்—பாராட்டத் தவறவில்லை.

பாராட்டும் புகழ்ச்சியும் சூட்டினரே தவிர, நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இயங்குமளவில் தமது ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் நல்கவில்லை.

ஒரு உயர்தர அதிகாரி வருவார், மந்திரியாரிடம்:

ஐயா! தாங்கள் நேற்று ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறீர்கள். அதனால், இவ்வளவு பணச்செலவு ஏற்படுகிறது — பலனோ கொஞ்சமாக இருக்கும் போலிருக்கிறது—என்பதாக, மந்திரியாரிடம், தெரிவிப்பார்—கடமையுள்ளத்தோடு.

உத்திரவு பிறப்பித்த மந்திரியாருக்கு உடனே எரிச்சல் கிளம்பும், 'நான் மந்திரி—என் உத்திரவில் இவன் குற்றம் கூறுவதா?' என்ற ஆத்திரம் காரணமாக, விளக்கமோ விவேகமோ, மலராது. 'எல்லாம் எனக்குத் தெரியும்!' என்று மந்திரியார் கூச்சலிட, உத்தியோகஸ்தர் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு வெளியேறுவார்.

காங்கிரஸ் ஆட்சியில் இதுபோலய் பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.

மந்திரியாரோ, நாட்டுக்காக சிறை சென்றவர், தியாகத் தழும்புகளை யேற்றவர் ஆனால் நிர்வாகத்தை அறியாதவர்.

நிர்வாகப் பொறுப்பு அறியாத காரணத்தால், ஆட்சிப் பொறுப்பு வகிப்பது புதிது என்பதால், பற்பல தவறுகளை இழைக்கும்படி நேரலாம்—இதைக்கூட தவறு என்று நாம் கூறவில்லை. —ஆனால், 'அது தவறு' என்று, யாராவது, விஷயம் புரிந்தோர் உணர்த்தினால், உரைப்போர்மீது சீறி விழுந்திருக்கிறார்கள்—சிந்தனைக்கு வேலைக்கொடாமல்.

இந்த மமதையின் காரணமாக சர்க்கார் இலாகாக்களில் விளைந்த காலதாமதமும், சங்கடங்களும், கொஞ்ச நஞ்சமல்ல. இந்த உண்மையை, கடலூரில் ஜன 27-ந்தேதி நடைபெற்ற வக்கீல்கள் மாநாட்டை திறந்துவைத்த சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ராமசாமிகவுண்டர் சூசகமாக, குறிப்பிட்டிருக்கிறார்.

"போறுப்பான பதவிகள், இந்திய சுதந்திரத்துக்குப்பின் நம்மவர் கைக்கு வந்தன. அவைகளை வகித்தவர்கள்—நல்லவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், அது சம்பந்தமான சட்ட அறிவும் பழக்கமும் இல்லாதவர்கள். அதனால், அவசரமும் அனர்த்தமும் நிறைந்த பல சட்டங்களை நாம் தாங்கவேண்டியாயிற்று" அவசரமும் அனர்த்தமும் விளைந்த சட்டங்கள்! — ஒன்றல்ல, இரண்டல்ல, மிகப்பல காங்கிரஸ் மந்திரிமார்கள் ஆட்சிபீடம் ஏறிய பிறகு, அதிகாரிகள், அவசரமயமான உத்திரவுகளை நிறைவேற்ற வேண்டியவர்களானார்கள். மதுவிலக்கு, பாதுகாப்பு சட்டம், முதலியவைகளை நிர்வகிக்கும் பொறுப்புகள் அதிகாரிகளுக்கும் போலீசாருக்கும், அதிகரித்தன.

நிர்வாகத்துறையில் அதிக சுமையை உண்டாக்கியது மட்டுமல்ல-போலீசாருக்கு புதியப் புதிய வேலைகளைச் சுமத்தினர். 144! பாதுகாப்பு சட்டம்! துப்பாக்கிக்கு வேலை! ஒற்றர்கள் கண் காணிப்பு! தடியடி! கண்ணீர்ப் புகை!—இது போல, வேலைகள் வளர்ந்தன. தினசரி, பவனி வர வேண்டிய, தொல்லையை போலீஸ் லாரிகளுக்குத் தந்தனர்.

அரசியல் எதிரிகளை ஒழிக்கும் ஆவல், அதிகாரிகளை விட மேம்பட்டோராக விளங்க வேண்டுமென்கிற போலிக்கவுரவம்—புதுப் புதுச் சட்டங்களையும், உத்திரவுகளையும் அள்ளி அள்ளி வீசலாயிற்று. விளைவு, இக்கட்டுக்கும், தொல்லைக்கும் அதிகாரிகள் ஆளாகினர்.

இது ஒரு புறமிருக்க, மந்திரிகளின் 'தேவதை'களாக ஆங்காங்கிருக்கும் உள்ளூர் காங்கிரஸ் பிரமுகர்களால், உத்யோகஸ்தர்கள் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

காங்கிரஸ் பிரமுகர் — தாசில்தாருக்கு, வேண்டுகோள்—இல்லை! கட்டளை—விடுப்பார். அது அவரால், நிறைவேற்றக் காலதாமதமானால், உடனே தந்தி பறக்கும் மந்திரிக்கு! உடனே, மறுநாளே, அந்த அதிகாரி கண் காணாப் பிரதேசத்துக்கு மாற்றப்படுவார்!!

* * *

நிர்வாகத்திலிருந்தோரை, நினைத்தவாறெல்லாம் ஆட்டிப் படைத்தனரே தவிர, புதுப்பொறுப்புகளைச் சுமத்தினரே தவிர, அவர் தம் துயர் போக்கி நன்மைகளைச் செய்து தர முனைந்தாரில்லை—மாறாக, சர்க்கார் அதிகாரிகள் தமது ச... ளம் உயர்த்தப்பட வேண்டுமெ... கோரியபோது, மிரட்டி, ஒடுக்கி...

திறமைசாலிகளைக் கண்டால் ... ருக்கு உத்தியோக உயர்வளித்... முன்னணிக்கு வரச் செய்வது... வெள்ளையன் காலத்திலிருந்த ... பாடு. ஆனால், காங்கிரஸ்கார... ஆட்சியிலமர்ந்த பிறகு, அந்தமு... மாறிற்று—'இவர் என் மனைவி... உறவினர்—கொடு வேலை!'—'இ... மனக்கு வேண்டியவர்—கொடு ... மோஷன்'—என்ற புது நிலை பி... தது. இதனால், பல நாள் உழை... தோர் உள்ளத்தில் கவலையும், அ... சியமும் உருவாகலாயின.

சுயநலம், கொழுந்துவிட்டெரி... தால், காங்கிரசாட்சியில், நிர்வா... சக்கரம் பழுதுபடும் நிலை ஏற்ப... விட்டது.

* * *

ஒரு நாட்டின், நன்மைக்கு, ... நாட்டை நடத்திச் செல்லும் அ... யல் வாதிகள், தங்கள் கூர்த்த... யைப் பயன்படுத்தி, சிற்சில தி... டங்களைத் தீட்டுவார்கள். அ... பீடம் ஏறினதும், அத்திட்டங்க... அமுல் நடத்த முயற்சிப்பார்க... அந்த முயற்சியை முடித்துத்த... பொறுப்பிலிருப்போர் — சர்க்க... காரியாலய உத்யோகஸ்தர்கள்தா...

எனவேதான், நிர்வாக இய... ரம்—ஒரு ஆட்சியின் இருதய... எனக் கருதப்படும்.

அந்த இருதயத்தைப் பு... படுத்திவிருக்கிறார்கள் —காங்கிர... ஆட்சியினர். இந்தக் கறை நீ... வேண்டும் — பழையபடி, புத... தெம்பும், ஆர்வமும், நிர்வாக உ... யோகஸ்தர்களிடம் மலரவேண்டு... அமையப் போகிற புது சர்க்கா... அதைச் செய்யுமாக! சுயநலத்தா... நிர்வாக இயந்திரம், கெட்டது ... கடந்த ஐந்தாண்டுகளில். அ... நிலை இனியும் எழாமல், வரவி... கும் புது சர்க்கார் செய்தல் வே... டும்!

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95. Tirukkachinambi St., Kancheepuram.